கிராமத்திலே இருக்கிறவர்களுக்கு அடிப்படை ஊதியம் என்ன என்பதை வைத்துத்தான் தேர்வு செய்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், 6 கிலோ மீட்டர் என்பதை எடுத்துவிட்டு, ஏழையாக இருந்தால் அது பள்ளிக்கு அருகிலே இருந்தாலும் சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பை உருவாக்கித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்போது அதற்கென்று சில அடிப்படைகள் வைத்து இந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற இந்தக் கருத்தினையும் பரிசீலிக்கலாம்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்ததை விட இந்த ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு மாணவர் விடுதி அதிகமாகத் திறப்பதாக முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு, தர்மபுரி, சேலம், திருச்சி, தஞ்சாவூர் பகுதிகளிலே இந்த ஆண்டு எத்தனை துவக்கப்பட இருக்கின்றன ? ஒவ்வொரு விடுதியிலும் மாணவர்களுடைய எண்ணிக்கையை எவ்வளவு அதிகபட்சமாகச் சேர்ப்பதாக அரசாங்கம் ஆணை விதித்து இருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி என்ற காரணத்தினால், இது குறித்துத்தனியாக ஒரு கேள்வி கேட்கப்படுமேயானால் அந்தக் கேள்வியின் மூலமாக அத்தகைய முயற்சிகள் நடைபெறுவதற்கும் வழி பிறக்கும் என்று கருதுகிறேன்.

எரிசாராயத் தொழிற்சாலை

* 2636—திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி தாலுக்கா. வயலூரில் எரிசாராயத் தொழிற்சாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) பழனி தாலுக்காவில் வயலூரில் எரிசாராயத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் எதுவுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

TAMIL NADU POLLUTION CONTROL BOARD LIBRARY

1990 ஏப்ரல் 25]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பழனி தாலுக்கா வயலூர் பகுதி, மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு ஏரியா. அந்தப் பகுதியிலே எரிசாராயத் தொழிற்சாலை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது ; மூலப்பொருள்கள் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் எல்லாம் இருக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை மீண்டும் பரிசீலனை செய்து, அப்படி ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஆணை பிறப்பிப்பாரா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே எரிசாராயத்திற்கான மூலப்பொருள் கிடைத்தால் பரவாயில்லை. வேறு சாராயத்திற்கான மூலப்பொருள்தான் கிடைக்கக்கூடாது. இருந்தாலும் தமிழகத்திலே இனிமேல் எரிசாராயத் தொழிற்சாலைகள் கூட்டுறவு மற்றும் பொதுத் துறையிலே மாத்திரம்தான் ஆரம்பிக்கலாம் என்று இந்த அரசு பொறுப்பேற்றவுடனே அறிவித்திருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படி அரசின் சார்பிலே ஆரம்பிப்பதாக இருந்தால் அந்த இடமும் பரிசீலிக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அரசின் மூலமாக அப்படி ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டு விட்டது, கூட்டுறவுத் துறை மூலமாக ஆரம்பிப்பதற்கான வழிவகை உள்ளது என்று கூறுகிறார்கள். அப்படி கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்தால் அதற்கு அனுமதி வழங்குவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் அளித்த பதில் அதுவல்ல. தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இனிமேல் தனியார் யாரும் எரிசாராயத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கக்கூடாது என்று இந்த அரசு பொறுப்பேற்றவுடனே அறிவித்து இருக்கிறது என்று குறிப்பிட்டேன். எனவே, ஆரம்பிப்பதாக இருந்தால் அரசுத் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோதான் எரிசாராயத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன வசதி வாய்ப்புகள் அந்த இடத்திலே இருக்குமேயானால், கூட்டுறவுத் துறையிலோ, அரசுத் துறையிலோ தொழிற்சாலை ஆரம்பிக்கின்ற எண்ணம் உருவாகுமேயானால், அந்த இடம் பற்றிப் பரிசீலிக்கப்படும்.

9-20 மணி

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, எரிசாராயத் தொழிற்சாலை தனியார்களால் தமிழ்நாட்டில் எத்தனை உருவாக்கப்பட்டிருக்கின்றன ? அரசுத் துறை

யால் எவ்வளவு உருவாக்கப்பட்டிருக்கின்றன? கூட்டுறவுத் துறையால் எவ்வளவு உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 8 டிஸ்டிலரீஸ் நிறுவனங்கள் ஏற்கனவே எரிசாராயத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றன. அதனுடைய விவரங்கள் திருச்சி டிஸ்டிலரீஸ், ஈ.ஐ.டி. பாரி—நெல்லிக்குப்பம்—கெம்ப்ளாஸ்ட்-காடாம்புலியூர், கோயம்புத்தூர் ஆல்கஹால் அண்டு கெமிக்கல்ஸ்—சின்னபுலியூர், ஓரியன் கெமிக்கல்ஸ் — செங்கை-அண்ணா மாவட்டம், கெம்ப்ளாஸ்ட்—தர்மபுரி மாவட்டம், சக்தி ஷுகர்ஸ்—பெரியார் நகர், Southern Agri-Furane Industries Mundiambakkam ஆகிய இந்த இடங்களில் இவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

புதிய சட்டம் கொண்டு வந்த பிறகு விடப்பட்ட பேருந்துகள்

*292—திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தனியார் பேருந்தை தேசியமயமாக்கலாம் என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்புக்குப் பின் தமிழக அரசு தனியார் பேருந்து விடவும் கூடுதலாகப் பேருந்து வைத்துக்கொள்ளவும் சட்டம் கொண்டுவந்த பிறகு விடப்பட்ட பேருந்துகள் எத்தனை ?

(ஆ) பயனடைந்துள்ள கிராமங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) 106 பேருந்துகள்.

(ஆ) 458 கிராமங்கள்.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, வழங்கப் பட்ட இந்த 106 உரிமங்களில் வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குப் போவதற்கு முன்னாலே வேண்டுகோள் விடுத்தவர்கள் எத்தனை பேர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது என்பதையும் வழக்கு தீர்ப்பு சொன்னதற்கு பின்னாலே எத்தனை பேருக்கு உரிமம் வழங்கப் பட்டது என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் நம்முடைய தேசீயமய சட்டத்தை எதிர்த்து வழக்கு நடைபெற்றது. அந்த வழக்கின் முடிவில் உச்ச நீதி மன்றத்தினுடைய தீர்ப்புப்படி சட்டம் செல்லுபடியாகும் என்று தீர்ப்பு சொல்லப்பட்டதற்குப் பிறகு கொடுக்கப்பட்ட பெர் மிட்டுகளுடைய எண்ணிக்கை, பேருந்துகளுடைய எண்ணிக்கை பயனடைந்த கிராமங்கள் ஆகியவை பற்றிய விவரம் இருக்கிறது.